## தமிழ்நாட்டில் தேர்தல் முடிந்து – ஆட்சி இன்னும் அமைக்காத நிலையில்,

# ‘பி.எம். சிறீ’ திட்டம் என்று மும்மொழிக் கொள்கையைத் திணிப்பதா?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



**சென்னை, மே 9-**

**தமிழ்நாட்டில் தேர்தல் முடிந்து, அரசு அமைக்கப்படாத நிலையில், பி.எம்.சிறீ. திட்டம் என்று மும்மொழிக் கொள்கையைத் திணிப்பதா? தமிழ்நாடு அதனை ஒருபோதும் ஏற்காது என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் முடிந்து, இன்னும் ஓர் அரசு பொறுப்பேற்காத நிலையில், ஒன்றிய அரசு தனது மும்மொழித் திட்டத்தைத் திணிக்கும் பி.எம்.சிறீ. திட்டத்தை ஏற்கச் சொல்லி நெருக்கடி தருவது கண்டிக்கத்தக்கதாகும்.

**மு.க.ஸ்டாலின் மிக உறுதியாக நின்று மறுத்தார்!**

பி.எம்.சிறீ. திட்டத்தை ஏற்றால் தான், சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு தமிழ்நாட்டு அரசுக்குத் தர வேண்டிய கல்விக்கான நிதி ரூ.2,152 கோடி வழங்கப்படும் என்று முன்பு ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியபோதே, தமிழ்நாட்டில் கடும் கண்டனம் எழுந்தது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மிக உறுதியாக இதனை மறுத்தார். ‘10,000 கோடி ரூபாய் கொடுத்தாலும் ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கையை ஏற்க மாட்டோம்’ என்று சுயமரியாதையுடன் நின்றார். மாணவர்கள், தர்மேந்திர பிரதானுக்குக் கருப்புக் கொடி காட்டவிருக்கின்றனர் என்று அறிந்து, தனது பயணத்தை ரத்து செய்தார் என்பது வரலாறு.

**பா.ஜ.க.வால் ஒருபோதும் தமிழ்நாட்டை ஆள முடியாது!**

இந்நிலையில் மீண்டும் அதனை வலியுறுத்தி, தமிழ்நாட்டில் ஹிந்தியைத் திணிக்க வழிவகுக்கும் பி.எம்.சிறீ. திட்டத்தில் கையொப்பமிட நெருக்கடி கொடுக்கிறது - ஒன்றிய ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க அரசு! ஒன்று ஹிந்தித் திணிப்பு இல்லையேல் நிதி மறுப்பு என்று தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியைத் தடுக்க, நிதி நெருக்கடி மூலம் தமிழ்நாட்டைப் பணிய வைக்கலாம் என்று ஒன்றிய பி.ஜே.பி. அரசு கருதுகிறது. பா.ஜ.க.வால் ஒருபோதும் தமிழ்நாட்டு மக்களை நேரடியாக ஆள முடியாது.

தமிழ்நாடு ஒருபோதும் இதற்குப் பணியாது. தமிழ்நாட்டு மாணவர்களும் இதனை ஏற்க மாட்டார்கள். கடும் போராட்டங்களை மாணவர்களிடம் திணிக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு முயலக் கூடாது. இல்லையெனில், அதற்குரிய விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

சந்தடி சாக்கில் கந்த(க)ப் பொடி தூவ நினைக்கிறதா ஒன்றிய பா.ஜ.க. அரசு? தமிழ்நாடு பொங்கி எழுவது உறுதி!

இவ்வாறு அவ்வறிக்கையில் - திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



சட்டமன்றத் தேர்தலில் ஆலந்தூர் தொகுதியில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் தா.மோ.அன்பரசன் குன்றத்தூர் ஒன்றியம் கோவூர் ஊராட்சியில் தேர்தல் பணியாற்றிய கழக நிர்வாகிகளுக்கும் இயக்கத் தோழர்களுக்கும் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# வெங்கத்தூர் - போளிவாக்கம் ஊராட்சியில் நீர்மோர் பந்தல் திறப்பு!

### தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் திறந்து வைத்து பொதுமக்களுக்கு வழங்கினார்!

திருவள்ளூர், மே 9:

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் கோடை வெப்பத்தின் தாக்கத்தை தணிக்க பொதுமக்களுக்கு நீர் மோர்பந்தல்திறக்கப்படும் என மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் தெரிவித்திருந்தார். அதன்படி

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் வெங்கத்தூர் ஊராட்சி, மற்றும் போளிவாக்கம் ஊராட்சியில் நீர், மோர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

அதன்படி வெங்கத்தூர் ஊராட்சி மணவாளநகரில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன் தலைமை தாங்கினார். கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.அரிகிருஷ்ணன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாநில விவசாய அணி நிர்வாகி ஆர்.டி.இ. ஆதிசேஷன், ஒன்றிய செயலாளர்கள் எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், பிரகாஷ் ஞான ஒளி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி. ராஜேந்திரன் கலந்து கொண்டு நீர், மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு குடிநீர், மோர், இளநீர், தர்பூசணி, கிருணி பழம், குளிர்பானங்கள் ஆகியவற்றை வழங்கினார்.

முன்னதாக அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதில் மாவட்ட நிர்வாகிகள் நந்தகோபால், பி. ஆர்.பிரபாகரன், பாலசுப்ரமணி, ராஜேந்திர குமார், கா.மு.தயாநிதி, தி.ஆ.கமலக்கண்ணன், மகளிர் அணி நிர்வாகிகள் வசந்தி, பிரேமா, அன்னபூரணி, ஒன்றிய நிர்வாகிகள் பாபு, ஒன்றிய துணை செயலாளர் செங்குட்டுவன், எம். கே.ரவி, லோகநாயகி, ஒன்றிய பொருளாளர் சி. ஆர். குமரன், மாவட்ட பிரதிநிதி நித்யானந்தம், திலீப்குமார், இளைஞர் அணி நிர்வாகிகள் மோகனசுந்தரம், கார்த்திக் மணி, சி. ஆர். மணிகண்டன், ராம்கி, மாணவர் அணி நிர்வாகிகள் ஜானகிராமன், கார்த்திக், சதீஷ் பாஸ்கர் உட்பட மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அதனை தொடர்ந்து போளிவாக்கம் ஊராட்சியில் நீர், மோர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பி. கே.நாகராஜ் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி. ராஜேந்திரன் நீர் மோர் பந்தலை திறந்து வைத்து மோர் இளநீர் தர்பூசணி பழம், கிருணி பழம் ஆகியவற்றை வாங்கினார்.

இதில் நிர்வாகிகள் எஸ். பாலசுப்பிரமணி, வி.பாபு, பி. ஜானகிராமன், கே.பாலாஜி, கிளைக் கழக நிர்வாகிகள் ஜி.தரணி, எஸ்.சண்முக ஆனந்தன், எம்.மாரி, எஸ்.லோகநாதன், ஆர். புருஷோத்தமன், எஸ். முனிவேல், ஜி.பாஸ்கர், ஜி.அன்பு, டில்லிபாபு, செல்வராஜ், சரவணன், சுதாகர், குரு டி.முருகன், ஆர் நாகராஜன், இளைஞர் அணி பி.கே.என். லோக கிருஷ்ணன், சோமேஸ்வர் உட்பட ஒன்றிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழக எல்லை சோதனைச்சாவடியில் சிக்கியது!

## காரின் ரகசிய அறையில் கடத்திய 2,27 கோடி ஹவாலா பணம் பறிமுதல்!

கூடலூர், மே 9-

தமிழக எல்லை சோதனைச்சாவடியில் காரில் கடத்தி வரப்பட்ட ரூ.2.27 கோடி ஹவாலா பணம் பறிமுதல் செய்யப்பட்டது. கேரள மாநிலம் வயநாடு மாவட்டம் சுல்தான் பத்தேரியில் இருந்து கர்நாடக மாநிலம் குண்டல்பேட்டை வழியாக மைசூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் கேரள, தமிழக எல்லையில் உள்ள முத்தங்கா சோதனைச்சாவடியில் காவல்துறை மற்றும் கலால்துறை போலீசார் நேற்று முன்தினம் வாகன சோதனை மேற்கொண்டனர். அப்போது அந்த வழியாக கர்நாடகாவில் இருந்து கேரளா நோக்கி ஒரு கார் வந்தது. அந்த காரை சோதனை செய்ய போலீசார் தடுத்து நிறுத்தினர். காரில் வந்த சுல்தான்பத்தேரி பகுதியைச் சேர்ந்த ஹர்ஷத் (44), கோழிக்கோடு மாவட்டம் கொடுவள்ளி பகுதியைச் சேர்ந்த இஸ்மாயில் (40) ஆகியோரிடம் போலீசார் விசாரணை நடத்தினர்.

அப்போது 2 பேரும் முன்னுக்குப் பின் முரணாக பேசினர். இதனால் போலீசாருக்கு அவர்கள் மீது சந்தேகம் எழுந்தது. இதைத்தொடர்ந்து காரில் சோதனையிட்டனர். அப்போது காரின் உள்ளே பல இடங்களில் சிறிய அளவிலான ரகசிய அறைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் கட்டுக்கட்டாக 500 ரூபாய் பணம் இருப்பது தெரியவந்துள்ளது. இதையடுத்து காரை முழுமையாக சோதனை செய்த போலீசார், காரில் இருந்த ரூ. 2 கோடியே 27 லட்சத்து 43 ஆயிரத்தை பறிமுதல் செய்தனர். கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட காரையும் பறிமுதல் செய்த போலீசார் காரில் வந்த 2 பேரையும் கைது செய்தனர். சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார், இவ்வளவு பெரிய தொகை எங்கிருந்து, யாருக்கு கொண்டு செல்லப்படுகிறது? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது டிரம்ப் விதித்த

# 10% புதிய வரி சட்டவிரோதம்!

## அமெரிக்க வர்த்தக நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

வாஷிங்டன், மே.9-

இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது டிரம்ப் விதித்த 10 சதவீத புதிய வரி சட்டவிரோதம் என அமெரிக்க வர்த்தக நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கி உள்ளது.

அமெரிக்க அதிபராக கடந்த ஆண்டு டிரம்ப் பொறுப்பேற்றார். அதன் பிறகு அந்நாட்டின் குடியேற்ற கொள்கையில் திருத்தம், மானியம் ரத்து என பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டார். தனது பேச்சை கேட்காத உலக நாடுகள் மீது அதிக வரி விதிப்பதாக அச்சுறுத்தல் விடுத்த அவர், சீனா, கனடா, மெக்சிகோ, இந்தியா உள்பட சுமார் 100க்கும் மேற்பட்ட நாடுகள் மீது கடுமையான வரிகளை விதித்தார்.

இதனிடையே, டிரம்பின் வரி விதிப்பு நடவடிக்கை சட்டவிரோதமானது என 3 கீழமை நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கியதை தொடர்ந்து, இந்த வழக்கை விசாரித்த அமெரிக்க உச்ச நீதிமன்றம், கடந்த பிப்ரவரியில் வெளிநாடுகள் மீதான பரஸ்பர வரிகளை ரத்து செய்து உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பின் சுங்க வரி உத்திக்கு அமெரிக்க வர்த்தக கோர்ட்டு மேலும் ஒரு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இதன்படி இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது டிரம்ப் புதிதாக விதித்த 10 சதவீத உலகளாவிய வரிகள் சட்டவிரோதமானவை என்று அமெரிக்க வர்த்தக கோர்ட்டு அதிரடி தீர்ப்பு வழங்கி உள்ளது.

## ஆபரேஷன் சிந்தூர்:

# வீரர்களுக்கு தேசம் வணக்கம் செலுத்துகிறது!

## குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அறிவிப்பு!

புதுடெல்லி, மே 9-

ஓராண்டுக்கு முன்பு, நமது ஆயுதப் படையினர் சிந்தூர் நடவடிக்கையின் இணையற்ற வெற்றி என குடியரசுத் தலைவர்திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் தேதி ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் பள்ளத்தாக்கில் சுற்றுலாப் பயணிகள் மீது பயங்கரவாதிகள் திடீரென துப்பாக்கி சூடு நடத்தினர். பயங்கரவாதிகளின் இந்த தாக்குதலால் இந்தியா மட்டுமல்ல உலகமே அதிர்ச்சி அடைந்தது.

பாகிஸ்தானில் பதுங்கி இருந்த பயங்கரவாதிகள் எல்லை தாண்டி வந்து இந்த தாக்குதலை நடத்தியது உறுதி செய்யப்பட்டது. ஒட்டு மொத்த நாடே கொதித்தெழுந்தது. இந்நிலையில் இந்திய ராணுவம் 2025ஆம் ஆண்டு மே 7ஆம் தேதி அதாவது இதே நாளில் தான் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் மீது ஆப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கையை எடுத்தது. இந்தியாவின் பஹல்காம் பள்ளத்தாக்கில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாக ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகிய மூன்று படைகளும் இணைந்து பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மற்றும் பஞ்சாப் மாகாணத்தில் பதுங்கி இருந்த 9 பயங்கரவாத முகாம்களை அழித்தன.

இதனால் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே போர் ஏற்படும் அபாயம் கூட எழுந்தது. 88 மணி நேரம் நீடித்த இந்த ஆபரேஷன் உலகின் பார்வையையே இந்தியா மீது திருப்பியது. பொது மக்களுக்கு சேதம் ஏற்படாமல் மிக துல்லியமாக பயங்கரவாதிகளின் முகாம்களும் பயங்கரவாதிகளும் அழிக்கப்பட்டனர். ஆபரேஷன் சிந்தூர் குறித்து தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் பதிவு செய்துள்ள பிரதமர் மோடி ஓராண்டுக்கு முன்பு நமது ஆயுதப்படையினர் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது இணையற்ற தைரியத்தையும் துல்லியத்தையும் வெளிப்படுத்தினர் என பெருமிதம் தெரிவித்தார்.

இந்தநிலையில், பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் அசைக்க முடியாத உறுதிக்கு ஆபரேஷன் சிந்தூர் தெளிவான சான்றாக விளங்குவதாக குடியரசுத் தலைவர்திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது:

ஓராண்டுக்கு முன்பு, நமது ஆயுதப் படையினர் சிந்தூர் நடவடிக்கையின் இணையற்ற வெற்றி, நமது ஆயுதப் படைகளின் தைரியத்தையும் உறுதியையும் பிரதிபலிக்கிறது.

பஹல்காமில் நடந்த கொடூரமான தாக்குதலுக்கு, தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டது. பயங்கரவாதத்திற்கும், நமது இறையாண்மை மற்றும் குடிமக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் அனைத்து சக்திகளுக்கும் எதிராக இந்தியாவின் அசைக்க முடியாத உறுதிக்கு ஆபரேஷன் சிந்தூர் ஒரு தெளிவான சான்றாக விளங்குகிறது.

தேசத்தை அச்சுறுத்த நினைப்பவர்களுக்கு, நமது தேசம் விழிப்புடனும், ஒற்றுமையுடனும், வலிமையுடன் பதிலடி கொடுக்கத் தயாராகவும் நிற்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இன்று, நமது வீரர்களின் அசைக்க முடியாத வீரம், தியாகம் மற்றும் தொழில்முறை திறனுக்கு தேசம் வணக்கம் செலுத்துகிறது என அதில் பதிவிட்டுள்ளார்.



சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி சைதை கிழக்குப் பகுதியில் வாக்காளர்களுக்கு நேற்று முன்தினம் (7.5.2026) மாலை 5 மணி முதல் 172 அ வட்டம் காமராஜபுரத்தில் தொடங்கி கோட்டூர்புரம் சித்ராநகர் வரை மா. சுப்பிரமணியன் நன்றித் தெரிவித்தார். இந்நிகழ்வில் பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன், வட்ட கழக செயலாளர் வி.முருகன், நேருநகர் எஸ்.பாட்சா, தா.மோகன்குமார், என்.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், ஆ.வரதன், க.மணி, கோட்டூர்புரம் சண்முகம் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியினர், தி.மு. கழக நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.




திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய ஒன்றிய தி.மு.க. சார்பில் வெங்கத்தூர் ஊராட்சி மற்றும் போலிவாக்கம் ஊராட்சியில் மாவட்டத் தலைவர் திராவிட பக்தன் தலைமையில் ஒன்றிய செயலாளர் கா.அரிகிருஷ்ணன், ஏற்பாட்டில் தலைமைச் செயற்குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி. ராஜேந்திரன் கலந்துகொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மற்றும் பொதுமக்களுக்கு குடிநீர், மோர், இளநீர், தர்பூசணி, கிர்ணி பழம், குளிர்பானங்கள் ஆகியவற்றை வழங்கினார். உடன் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ. ஆதிசேஷன், ஒன்றிய செயலாளர்கள் எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், பிரகாஷ் ஞான ஒளி, மற்றும் நிர்வாகிகள் பி.கே. நாகராஜ், பி.ஆர். பிரபாகரன், நந்தகோபால், பாலசுப்பிரமணி, ராஜேந்திரகுமார், சி.ஆர்.குமரன், கொப்பூர் திலிப் குமார், கே.ஏ.சத்யா, வசந்தி பிரேமா, அன்னபூரணி, செங்கூட்டவன் எம்.கே.ரவி, லோகநாயகி, நித்தியானந்தம், மோகனசுந்தரம், ராம்கி, கார்த்திக் மணி,சதீஷ் பாஸ்கர், சி.ஆர் மணிகண்டன் மற்றும் பலர் உள்ளனர்.